உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

இஷ்டலிங்கவகவல்.

கருணைப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலையதேசிகராதீனத்துச்

சிதம்பரம்

ஈசானியமடம்

இராமலிங்கசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு,

சென்னை:

கலாரத்நாகர யந்திரசாலையில்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

குரோதிஸு விருச்சிகரவி.

1904.

சிவமயம்.

இவ்வகவலைப்பற்றி மிகமுயன்றும் (௫௬) வது முதல் (௨௫) அடி குறைந்தபிரதியொன்றே கிடைத்தமையின் பிரதியிறவாவண்ணம் முற்பதிப்பு அவ்வாறே பதிக்கப்பட்டது. இப்பொழுது பூர்த்தியாகவுள்ள பிரதிகிடைத்தமையின் இப்பதிப்பு குறைவிலதாகச் சுத்தமாகப் பதிக்கப்பட்டிருக்கின்றது.

விலை அணா - ௪.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இஷ்டலிங்கவகவல்.

நேரிசையாசிரியப்பா.

விரிகட லாடைப் பெருநில மடந்தைக்
கரும்பெற லாரம் புனைந்தினி தொழுகும்
பொருதிரைப் பொன்னித் திருவரங் கத்துப்
புதுவெயி லெறிக்குங் கதிர்மணி சுமந்த
வாயிரஞ் சுடிகை மாயிரும் பாந்தட்
பள்ளி மீமிசை யொள்ளொளி மின்னொடு
கருமழை கிடந்த காட்சி போலப்
பிறைநுதற் றிருவோ டறிதுயி லமர்ந்த
புரிவளைத் தடக்கைப் பெரியோன் றனு
மலர்தலை யுலகம் பலவும் பயந்து
தெய்வத் தாமரைத் திருத்தவி சிருக்கு
மசைவில் காட்சித் திசைமுகத் தொருவனு
மீண்டித னடியுஞ் சேண்டொடு முடியுந்
தனித்தனிக் காண்குது மெனத்தமி லிசையா
விலங்குபிறை மருப்பின் விலங்குரு வெடுத்து
நெடுநிலங் கிளையா வுடன்மிகத் தளர்ந்து
நிறைமதி நிறத்துப் பறவையுருப் பரித்து
வானகம் பறந்து மேனிநொந் திளைத்துங்
காண்டல் செல்லா தியான்பல கழிய

---

(௯) பெரியோன்றனும் திசைமுகத்தொருவனும் காண்டல் செல்லாதென இயையும்.

மண்டழற் பிழம்பாய்ப் பண்டு நின்றோன்
பூசனை விடுத்த மாசுபுரி நெஞ்சத்து
வீயா வஞ்சத் தீயோ ரிருந்த
கடிகொண்மூ வெயிலும் பொடிபட நகைத்தோன்
பொன்னி னியன்றன மென்னறுங் கொன்றையும்
வெள்ளியிற் குயின்றன வெள்ளையொள் ளெருக்கு
மொழுகொளி மரகதத் தெழில்பெறச் செய்தன
வறுகும் வில்வச் செறிபசுந் தழையுந்
தும்பையு மத்தமும் வம்பவி ழாத்தியுங்
கொழிக்கு மிருந்திரைக் குளிர்புனற் பெருக்கிற்
சிறுவெள் ளோதிமந் திரிதர லென்ன
வெண்ணில வொழுக்குந் தண்மதிக் கொழுந்து
திரிதரச் சிறந்த செக்கரஞ் சடையோன்
மன்றலம் பொதியிற் றென்றலந் திருத்தேர்த்
திங்களங் கவிகை யைங்கணைக் கிழவனைப்
பற்றிய செந்தீ நெற்றிநாட் டத்தோ
னருடிரண் டெழுந்த வுருவமென் றுணர்த்தி
யிருள்குடி யிருந்த திருவமர் மிடற்றோ
னேனையோர்க் கிறைமை யின்மை காட்டி
முடங்குளை மடங்கன் முகனடுக் கோத்த
வெண்டலை மாலை கண்டவர் வெருவத்
தண்டாது கிடக்குந் திண்டோட் பொருப்பின
னண்டப் பித்திகை விண்டிட வதிர்க்குந்
தீவாய்ப் பிணையும் பூவாய்க் கணிச்சியு
மன்ன முயர்த்தோன் சென்னிக் கடிஞையு
மணந்தரு தண்டுழாய்ப் பிணந்தலைச் சுமந்த
முத்தலைச் சூலமும் வைத்தகைத் தலத்தோன்
வான்றோய் செக்கரிற் றோன்றுபிறை யென்னப்

(சச) கடிஞை - இரப்போர்கலம்

பொன்வரைக் குவடு தன்வயிற் றுரிஞ்ச
மேனிவந் தோங்கிய வெஞ்சினக் கேழலின்
கோடிடந் திமைக்கும் பீடுகெழு மார்போன்
பின்றையுகிர் நோன்றாட் பொறியுடற் பேழ்வா
யுறுவலிப் புலியி னுரியிடை யுடீஇத்
துத்திப் பைத்தலைச் சுடர்மணிச் சூட்டுக்
கடுவொடுங் கெயிற்றுநாண் கட்டிய வரையோன்
திருகுவெஞ் சினத்தி னுருகெழு தோற்றத்
தெறுழ்வலித் தடந்தோட் டறுகட் கூற்ற
மூழியி லெழுதரு முறுவளி சாய்த்த
நீனிறக் குன்றம் போன்மெனச் சாய
வொருசிறிது நிமிர்ந்த முருகுவிரி கமலத்
தளர்நலங் கவற்று மறைகழ லடியோன்
வெள்ளி மால்வரை துள்ளிநடந் தன்ன
கடுநடைச் செங்கண் விடைவல னுயர்த்தோ
னிமைய மீன்ற வமையுறழ் தடந்தோட்
கொவ்வைச் செவ்வாய்க் கொடியிடைக் குவிமுலைக்
கருங்குழற் பிறைநுதன் முருந்திள முறுவற்
றிங்கள் வாண்முகப் பொங்கர வல்குற்
றளிர்புரை மெல்லடி விளரியந் தீஞ்சொற்
கயல்புரை யரிக்கட் கருணையங் கருங்கட
லினிதுவீற் றிருக்கு மிடமருங் குடையோ
னின்னண மிருப்பினுந் தன்னிலை யெவர்க்கு
மிற்றெனக் கிளக்கும் பெற்றிய னல்லோன்
பெறுதலு மிழத்தலும் பிரிதலும் புணர்தலு
மூணு முறக்கமு மூக்கமு மடிமையும்
பிணியு மச்சமும் பிறபல குணனுந்
தோற்றமும் பருவமுந் தொலைவு மில்லோன்
சங்கர னமலன் றூணு சதாசிவன்

முழுதொருங் குணர்ந்தோன் முன்னோன் றலைவன்
றன்னருட் பெருமைக் குன்னரும் பிறவிக்
கழிபெருந் துன்பமுற் றுழிதரு வோர்ந
யீர்த்தாட் கோட லியற்கை யாகலி
னுடலெனப் பெயரிய விடலருஞ் சிறைப்பட்
டாரஞர் மூன்று மாஞ தருந்து
மென்னையு மாளத் தன்னுளத் தெண்ணி
மனமொழி மெய்களின் மருவரு மொருதான்
கருங்கட லுடுத்த விருங்கண் ஞா லத்துக்
குரவ னெனவோ ருருவொடு வந்து
பெரிதுட் கிடந்த வருள்வெளிப் படுத்து
நன்னர் நோக்கத் தென்னை நோக்கிய
வுலகம் விளக்கும் பலகதிர் பரப்பி
வாளர வென்னுமோர் தாளினிற் பூத்த
வங்கண்மா ஞாலப் பங்கய மலர்க்குப்
பொன்னிறக் கொட்டையாய்ப் பொலிந்துநின் றுயர்ந்[து
விண்டொடு குடுமி மேருவலந் திரியு
மாழியொன் றுடைய வேழ்பரி நெடுந்தேர்ப்
பரிதி வானவன் பரவையிற் றோன்றப்
பாயிரு டொலைத்துப் பகல்பிறந் தென்ன
வுள்ளிரு டுமித்தாங் கொளிசிறந் தன்றே
அவ்வழி
யளியனுந் தற்பெறக் களிமிகுந் தினிதினே

(அஉ) அஞர் மூன்று - ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம், என்டன. அவை முறையே சடத்தொடுகூடிய சேதனம்வாயிலாக வருவதும், பஞ்சபூதம்வாயிலாக வருவதும், ஒருவாயிலானன்றித் தெய்வந்தானேகாரணமாக வருவது மாகிய துன்பங்கள்.

(அஅ) நோக்கிய ஒளி சிறந்தன்றே என இயையும். நோக்கிய - நோக்க. ஒளிசிறந்தன்று - ஞானம் மிகுந்தது.

(கூஅ) கள்சிறந்திசினே என்பதும்பாடம்.

தன்னை யெனக்குத் தானீங் தருள்புரிங்
தென்னிடத் தொழிவின் றிருந்தனன் மன்னோ
தன்னுண்டைத் தவரை யின்னலம் பிறவிப்
பெருந்துயா யகற்றி யரும்பெற லின்பத்
தொருதனி வீட்டுல குய்த்த லானுந்
துஞ்சினோ ரென்பு தோய்த லானு
மூன்கெட வுடம்பு நோன்புழக் திமைய
மீன்றகொம் பிடத்துத் தோன்றுத லானு
மொப்புமை யின்றி யுயர்ந்தமை யானுந்
தன்னை மானும் பன்னருஞ் சிறப்பிற்
கங்கையென் றுரைக்குங் கடவுளா றுடுத்த
பேசரும் பெருமைக் காசியம் பதியுந்
தரைமிசை நின்ற விரிதலைத் தாழையின்
பூங்குலை சிதறித் தாங்கரும் பெருங்கா
யழனிறத் தாமரை யலரிதழ் சிதர்ந்து
பொன்னிறக் கொட்டை சின்னமுற் றிடவுஞ்
சேயிதழ் மலரினும் பசசடை யிடத்து
மினிதிருந் தயர்வுயிர்த் திரைதேர் கமஞ்சூற்
சங்கின மலறுபு சைவலத் தொளிப்பவுங்
குரண்டமுங் கம்புளும் வெருண்ட நோக்கொடு
தலைமீ தெடுத்தெடுத் தலைநீர் மூழ்கவு
மஞ்சிறை யன்னமு மளியின் ருகுதியும்

(௧00) ஒழிவின் றிருத்தலாவது - தூலதனுவில் இட்டலிங்கமாகவும், சூக்குமதனுவில் பிராணலிங்கமாகவும், காரணதனுவில் பாவலிங்கமாகவும், அகலாதமர்ந்திருத்தல். எங்ஙனமிருந்தனரென்னின், காசி முதலிய பல்பெரும்பதிகளனைத்தினும் கண்டோர்க்கு வினைத்தொடர்பகல வீற்றிருந்தெனவே இருந்தனர் என இறுதியடிகளோடுகூட்டி முடிக்குக. இன்று - இன்றி.

(௧௧௨) பெருங்காய் வீழ்தர வாளைபாயும் என இயையும்.

இஷ்டலிங்கவகவல்.

வெள்ளியம் புயலுங் கரிய மங்குலும்
பரந்தன வெழுந்து கரந்தன விரியவும்
விரிகதிர் ஞாயிற்றின் வெயில்பெற வேட்டுக்
கோட்டருகு கிடந்த கூன்முது காமை
கைய தெறிந்தென வொய்யென வீழ்ந்து
கீழ்நீர்ப் புகவுங் கிளர்பெருந் திரையெழுந்
தோங்கிருங் கரைமிசைப் பாய்ந்தன புரளவுந்
துடுமென வீழ்தரக் கடுவிசை வாள்புரை
வாளை பாயுந் தாளதா மரைத்தடத்
தாடுநர் வீழ்த்த வவிரொளி மணிப்பூ
ணீர்க்கீழ்ப் படர்ந்த நெடுந்துகிர்க் கொடியென
நனிகிடந் திமைக்கும் பனிபடு நறுமலர்
மல்லலம் பசும்பொழிற் றில்லையம் பலமுங்
கவையடி வெடிவாற் குவிமுலை மேதி
மனையுழைக் கன்றை நினைதொறுஞ் சொரிந்த
வெண்பா லருந்திய செங்கா லன்னந்
தாமரைத் தவிசின் மீமிசை யுறங்குங்
கன்னகன் கழனி விண்ணக டுரிஞ்சு
நொச்சிசூழ் கிடந்த கச்சிமா நகரமுந்
தண்டளிர்க் கோட்டுப் பிண்டிமுதல் பெயர்த்து
வெறிகமழ் சந்தனச் செறிவுகெட முருக்கி
விண்புகு நெடுஞ்சினைச் சண்பகஞ் சாடிக்
காழுடை யகிற்றிரள் வீழ்தர தூக்கி
மங்குல்கண் படுக்குங் குங்குமஞ் சாய்த்து
மிளிர்மணி யருவிக் குளிர்புனன் முகந்து
தாம்புடை நெடுங்கையிற் றாய்விளை யாடு
மீர்ங்கவுட் புகர்முகக் கூர்ங்கோட் டிரற்கால்
வெஞ்சினக் குஞ்சர மஞ்சுவரு நெஞ்சொடு
பசுந்தழை பொதுளிய விசும்புற நிமிர்ந்து

வாரியின் டெழுதரு மழையொடு முரணும்
புதுவேய்ப் பொதும்பரிற் கதுமென வொளிக்க
வடங்கருஞ் சினத்து முடங்குளை நோன்றாட்
பெருவலி யரிமா னுருமென வதிர்க்கு
மணிகிள ரடுக்கத் தருணையங் கிரியு
மணிவரன் றருவிவீழ் மல்லிகார்ச் சுனமுஞ்
சோதி மாமரஞ் சுடுதழற் பிழம்பென்
றிளமட மந்தி யேறா தகலுந்
திருக்கா ளத்தியா முருக்கிளர் பொருப்பு
மீன்கணத் தகவயின் விளங்குவெண் டிங்களி
னெழுகொளி நித்திலக் குழுவினுள் வலம்புரிச்
சங்குகிடந் துறங்கும் பொங்குபுனற் பழனத்துக்
கரும்படு களம ரிரும்பு கைவிடுத்
தடிபெயர்த் தோடிக் குடவளை யிடறி
யெழுநீர்ப் பசுந்தாட் கழுநீர்க் குப்பையுள்
வண்டினம் வெரீஇயொலி கொண்டெழ வீழ
நெடுநெறிக் கரும்பி னெருக்கிடைக் கிடந்த
கடுவரா லுகளுங் கம்பலை யவியா
வொருவாச் செல்வத் திருவா ரூரு
மாரங் குங்கும மகில்கரி மருப்புப்
பொன்மணி முதலிய பொருதிரைக் கையால்
விரிபொழி னிமிர்ந்ததன் னிருகரை மருங்கினும்
வாழ்நர்க் குதவு மணிமுத் தாறெனும்
பெருநதி யுடுத்த திருமுது குன்றமும்
வரைபக வெறிந்து மாமுத றடிந்த
மணிநெடு வேலொடு வளர்பூங் குடுமி
முள்ளுடை நெடுந்தாட் புள்ளணி கொடியோன்
வள்ளிபுரை மருங்குல் வள்ளிமா துக்குஞ்

(கசூஉ) களமர்வீழ வராலுகளும் என இயையும்.

செயரி நெடுங்கட் டெய்வயா னைக்குங்
காணியென விளங்கும் பூணணி மார்போ
னருணளி சுரக்கு மறுமுகத் தொருவன்
றன்னிக ரில்லாத் தனிமுதற் கடவுள்
வெட்சிமலர் சூழ்ந்ததன் விரைமலர்த்திருவடி
யுள்ளுநர் தமக்குங் கள்ளவிழ் சேயித
ழல்லியந் தாமரைச் செல்வனும் வணங்கும்
பெறலரு மரசு பெறவினி தளிப்போன்
றேங்கமழ் கடம்பின் றெரிய றுயல்வரூஉம்
பன்னிரு தடந்தோட் பண்ணவ னிருந்த
பனியிரு விசும்புதோய் பரங்குன் றிழியு
மணியருவி கொழித்த மணிகிடந் திமைக்குந்
திருமலி மறுகிற் செந்தமிழ்க் கூடலுந்
தமிழ்குடி யிருந்த தடவரைத் தோன்றி
யிமிழ்திரை ஞாலத் தமிழ்தெனக் கிடந்த
தண்பொருநை யுடுத்த விண்பொரு நெடுமதி
னெல்லையு முதலிய பல்பெரும் பதிக
ளனைத்தினுங் கண்டோர்க் ககற்றரும்
வினைத்தொடர் பகல வீற்றிருந் தனவே.

இஷ்டலிங்கவகவல் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கருணைப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.